# பிரதமசெயலாளர் செயலகம்,வடக்குமாகாண சபை

ප්‍රධානලේකම්කාර්යාලය,උතුරුපළාත්සභාව

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

A9 வீதி,கைதடி,யாழ்ப்பாணம்.
A9 පාර,කයිදඩි,යාපනය.
A9 Road,Kaithady, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


My No: NP/09/BDT/04/19/CIR-BDT/2019 Date : 12.12.2019

பாதீட்டுச் சுற்றுநிருப இலக்கம் : BDT/CIR/04/2019

செயலாளர்கள்,
பிரதிப் பிரதமசெயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
நியதிச்சட்ட நிறுவனத் தலைவர்கள்,
வடமாகாணம்.

**அரசாங்க செலவினத்தை முகாமைசெய்தல் மற்றும் நிதி ஒழுங்கினைப் பேணுதல்.**

மேற்படி விடயம் தொடர்பாக நிதி பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் 04/12./2019 ஆம் திகதிய வரவுசெலவுத்திட்ட சுற்றுநிருப இலக்கம் 07/2019 இன் பால் தாங்களது தனிப்பட்ட கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. அதன் பிரகாரம் வடக்கு மாகாணசபையின் ஆளுகைக்குட்பட்ட செயலகங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களில் முறையான செலவினக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறுவதனையும் அத்தகைய நடவடிக்கைகள் செலவினத்தைக் குறைப்பதில் வினைத்திறனாக காணப்படுவதற்கும் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் , கணக்கீட்டு அலுவலர்கள் அனைவரும் பொறுப்பாக இருத்தல் வேண்டும். இப்பின்னணியில் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்கள் விசேடமாக மின்சாரம், நீர், தொலைபேசி தொடர்பாடல் சேவை , காகிதாதிகள் மற்றும் அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்தல் , உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பிரயாணங்கள் தொடர்பான செலவினங்கள் ஆகியவற்றுக்கான செலவினங்களை முகாமை செய்யும் வகையில் முடியுமான செலவின முகாமைத்துவ அளவுகோல்களை தயாரித்து செயற்படுத்துதல் வேண்டும். அவ்வாறான அளவுகோல்களை இனங்கண்டு 2019 டிசம்பர் 20 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பிரதிப்பிரதம செயலாளர் - நிதி அவர்களுக்கு முகவரியிட்டு மாகாணப் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் அவர்களுக்கு பிரதியிட்டு அதன் மென் பிரதியினை மாகாணத் திறைசேரியின் மின்னஞ்சல் (npctreasury@gmail.com) முகவரிக்கும், உள்ளகக் கணக்காய்வாளரின் மின்னஞ்சல் (npcaudit@yahoo.com) முகவரிக்கும் அனுப்பிவைத்தல் வேண்டும்.

3. மாகாண பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், தங்களால் முன்வைக்கப்பட்ட செலவினக்கட்டுப்பாட்டு அளவுகோல்களின் அடிப்படையில் தங்களது நிறுவனங்களின் செலவினக்கட்டுப்பாட்டினை நடைமுறைப்படுத்துவதனை உறுதிசெய்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

4. மேலும் வாகனங்கள், மற்றும் அலுவலக உபகரணங்கள் புதிதாக கொள்வனவு செய்ய முடியாது என்பதனை தெரிவித்துக்கொள்வதுடன் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் திண்மக்கழிவகற்றல் தேவைகளுக்காக அவசியப்படும் வாகனங்களின் தேவைக்கான விண்ணப்பங்கள் மட்டும் உரிய சிபார்சுடன் பொதுத் திறைசேரிக்கு அனுமதிக்காக முன்னளிக்கப்படலாம்.

5. எனவே சகல நிறுவனங்களிலும் தற்போதுள்ள வளங்களை உரிய முறையில் வினைத்திறனுடன் முகாமை செய்வதன் மூலம் முழுமையான பயன்பாட்டுக்கு உட்படுத்தக்கூடிய அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்.

6. மேலும் மாகாண நிதி அல்லது ஏனைய நியதிச்சட்ட நிதியத்தின் பணத்தினைப்பயன்படுத்தி தினப்பதிவேடு மற்றும் நாள்காட்டிகள் என்பனவற்றை அச்சிடுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

எனவே குறித்த வழிகாட்டல்களுக்கு அமைவாக செயற்பட்டு வினைத்திறன்மிக்க செலவின முகாமைத்துவம் தொடர்பான புதிய அரசாங்கத்தின் செயற்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் கணக்கீட்டு அலுவலர்களை வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது.

அ.பத்திநாதன்
பிரதமசெயலாளர்,
வடமாகாணம்.

பிரதிகள்:

1.ஆளுநரின் செயலாளர், வடமாகாணம் - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு தெரியப்படுத்துவதற்கு

2.உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி, வட மாகாணம் } தகவலுக்காக
3.பணிப்பாளர் நாயகம் - தேசிய பாதீட்டு திணைக்களம். }

4.பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்,வட மாகாணம்- கட்டுப்பாட்டு செலவின அளவுகோல்களை நடைமுறைப்படுத்துவதனைக்கண்காணிப்பதற்கு.